

தமிழக வெற்றி கழகத்தைச் சார்ந்த வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதி வார்டு 97 வது வட்டத்தில் இருக்கின்ற 16 இளைஞர்கள் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன் ப.ரங்கநாதன், வே. வாசு, ஓ.ஏ.நாகலிங்கம் ஆகியோர் உடனிருந்தனர்.

# திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிவிப்பு!



திருப்பூர், மார்ச் 17-

திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன் ஆகிய எனது தலைமையில் 18.03.2026 புதன்கிழமை நாளை காலை 10.00 மணியளவில் தாராபுரம், திருப்பூர் சாலையில் அமைந்துள்ள "ஐஸ்வர்யம் ஹோட்டல் அரங்கில்" நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்த்திதுறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர், உணவு (ம) உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி கழக மகளிரணி துணை செயலாளர், மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரையாற்ற உள்ளனர். அதுசமயம் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள். மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தவறாது இக்கூட்டத்தில்கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4-ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## கரூர் உள்பட

# 4 மாவட்ட எஸ்.பி.க்கள் மாற்றம்!

## தேர்தல் ஆணையம் உத்தரவு!

சென்னை, மார்ச் 17-

கரூர், ஈரோடு, நாகப்பட்டினம், விருதுநகர் மாவட்ட எஸ்.பி.க்களை மாற்றி தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் ஒரேகட்டமாக 234 தொகுதிகளுக்கும் வருகிற ஏப்ரல் 23 ஆம் தேதி தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதையொட்டி தமிழகத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளன. பறக்கும் படையினர் சோதனை, விளம்பரங்கள் அழிப்பு என நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் தமிழகத்தில் 4 மாவட்ட எஸ்.பி.க்களை மாற்றி தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. கரூர், ஈரோடு, நாகை, விருதுநகர் மாவட்ட எஸ்.பி.க்கள் மாற்றப்பட்டுள்ளனர்.

கரூர் எஸ்.பி.யாக டி. என். ஹரிகிரண் பிரசாத்,

ஈரோடு எஸ்.பி.யாக டி.வி. கிரண் சுருதி,

நாகை எஸ்.பியாக சுஜித் குமார்,

விருதுநகர் எஸ்.பி.யாக என். ஸ்ரீநாதா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# சென்னை வடகிழக்கு மாவட்ட, பகுதி, ஒன்றிய, பேரூர், வட்டக் கழகச் செயலாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக, ஒன்றியக் கழக, பேரூர் கழக, வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாளை (18.03.2026 - புதன்கிழமை) மாலை 4.00 மணியளவில், மாதவரம், பேருந்து நிலையம் எதிரில் அமைந்து உள்ள ராஜ ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் தலைமையில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற உள்ளது.

மேலும் இக்கூட்டத்தில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர், மாதவரம் தொகுதிப் பார்வையாளர் டாக்டர் ஜெ.அருண் மற்றும் திருவொற்றியூர் தொகுதிப் பார்வையாளர் எஸ்.மோகன் ஆகியோர் கலந்து கொண்டு கூட்டம் நடைபெற உள்ளது.

மேற்படி இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, பேரூர், வட்ட கழகச் செயலாளர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளிட்ட அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் நேற்று (16.03.2026) நடந்த மாவட்ட செயலாளர் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து மற்றும் கழக ஆக்கப் பணிகள்

**மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.**

செயலாளர், வடகிழக்கு மாவட்ட தி.மு.க.



ஒன்றிய பாஜக அரசின் தவறான வெளியுறவுக் கொள்கையாலும், போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததாலும் ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு தட்டுப்பாட்டைக் கண்டித்தும், தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் பா.ஜ.க அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் மேற்கு ஒன்றிய மேட்டுப்பாளையம் ஊராட்சியில் ஒன்றிய செயலாளர் ஆ.ராஜா தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். இதில் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்கள்

## பத்திரிகையாளர்களுக்கு பல்வேறு அறிவிப்புகள்!

# முதல்வருக்கு டி.என்.பி.எம்.ஆர்.யூ. நன்றி!

## மாநிலத் தலைவர் மு.சிவதமிழவன் அறிக்கை!

சென்னை, மார்ச் 17 -

தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர்ஸ் யூனியன் நிறுவன தலைவர் டாக்டர் மு.சிவதமிழவன் மற்றும் பொதுச் செயலாளர் சி.பி.ராஜன், பொருளாளர் ஏ.சேகர் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

தமிழ்நாட்டின் மக்களின் மீதும், தமிழ்மொழி, இனம் மற்றும் சுயமரியாதை மீதும் என்றைக்கும் அக்கறை கொண்டிருக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்கும் பத்திரிக்கை துறையினர்கள் மீது என்றைக்கும் அக்கறைக் கொண்ட முதல்வராக, பத்திரிக்கை மற்றும் ஊடக துறையினர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து அவர்களை காத்து வருகிறார்.

தற்போது இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாக பத்திரிகையாளர்களுக்கு மருத்துவக் காப்பீடு, வீட்டுமனை, ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்குதல் உள்ளிட்ட பல அறிவிப்புக்களை தந்து பத்திரிகையாளர்கள் வாழ்வில் மீண்டும் ஒளி ஏற்றி இருக்கிறார்.

தமிழ்நாட்டின் அனைத்து தரப்பு மக்களும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியை போற்றி வாழ்த்துவதைப் போலவே, பத்திரிகை மற்றும் ஊடக துறையினரும் வாழ்த்தி நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த திட்டங்களை தந்த முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், அதிகாரிகளுக்கும் இந்த சந்தர்ப்பத்தில் எங்களின் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மீண்டும் தமிழ்நாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான நல்ஆட்சி தொடர்ந்து, பத்திரிகையாளர்கள் நலன்களை பேணும் அரசாக தொடரும் என்று தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்ட்டர்ஸ் யூனியன் சார்பில் வாழ்த்துகிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## மயிலை த.வேலு – கோவி. லெனின் பங்கேற்பு!

# மயிலை கிழக்கு - மேற்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் - பாக முகவர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர்கள் எஸ். முரளி – நந்தனம் கி.மதி அறிக்கை!

சென்னை, மார்ச். 17-

மயிலை பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ். முரளி -நந்தனம் கி.மதி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தென் மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு மேற்கு பகுதி திமுக சார்பில் வட்ட கழக செயலாளர்கள்,பாக ஒருங்கிணைப்பாளர்கள், BLA 2 ஆலோசனை கூட்டம் இன்று (17,03,2026 - செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணியளவில் முத்தமிழ் பேரவை, ராஜா அண்ணாமலைபுரத்தில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த. வேலு தலைமையில் மயிலை தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கோவி. லெனின், பகுதி செயலாளர்கள் எஸ்.முரளி, நந்தனம் கி.மதி ஆகியோர் முன்னிலை யில் ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது.

ஆகவே இக்கூட்டத்திற்கு அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பொருள் : வருகின்ற சட்டமன்ற தேர்தல் 2026 குறித்து மற்றும் கழக ஆக்கப்பணி

இவ்வாறு மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ் .முரளி, மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி. மதி ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# ஞானபீடம் – கலைஞர் நினைவிடம்!



**ஐயா!**

**வழக்கமாய்**
**உங்கள் பீடத்திற்கு**
**மலர் கொண்டுவருவேன்;**
**இன்று ஞானபீடம்**
**கொண்டு வந்திருக்கிறேன்**

**உங்கள்**
**தலைமாட்டில் வைத்துத்**
**தலை வணங்குகிறேன்**
**எப்போதும் எனக்கொரு**
**பொன்னாடை போர்த்துவீர்கள்;**
**இப்போது இல்லை**

**பொன்னாடைக்கு மாறாக**
**ஒரு பூ எடுத்துக்கொள்கிறேன்**

**கண்ணீரோடு...**



கவிப்பேரரசு
**வைரமுத்து**

## சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.

# மயிலாப்பூர் - தியாகராயர் நகர் சட்டமன்றத் தொகுதிகளின் பாகமுகவர்கள் (BLA2) கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படி சென்னை தென்மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட மயிலாப்பூர், தியாகராயநகர், சட்டமன்ற தொகுதிகளின் பாகமுகவர்கள் (BLA2) கூட்டம் இன்று (17.03.2026 - செவ்வாய்க்கிழமை) கீழ்க்கண்ட அட்டவணையின்படி மாவட்டசெயலாளர் த.வேலு எம்.எல்.ஏ. எனது தலைமையில் நடைபெறுகின்றது.

| சட்டமன்ற தொகுதி | நாள் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| தியாகராயர் நகர் | 17.03.2026 | மாலை 5.00 | மாம்பலம் சந்திரசேகர் திருமண மண்டபம் எல்லையம்மன் கோயில் தெரு |
| மயிலாப்பூர் | 17.03.2026 | மாலை 7.00 | முத்தமிழ் மன்றம் ஆர்.ஏ.புரம் |

இக்கூட்டத்திற்கு சென்னை தென்மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், பகுதிசெயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள் மற்றும் பாகமுகவர்வகள், (BLA2) பாகஒருங்கிணைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மயிலை த.வேலு எம்.எல்.ஏ.**

சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.



பம்மல் வடக்கு, தெற்கு பகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் சமையல் எரிவாயு எல்.பி.ஜி. தட்டுப்பாட்டை கண்டித்தும். தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய அரசையும். அதன் அடிமை கூட்டணியை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் பம்மல் இரட்டைப் பிள்ளையார் கோயில் அருகில் பம்மல் தெற்கு பகுதி செயலாளர், மண்டல குழு தலைவர் வே.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயக்குமார் வரவேற்புரையாற்றினார். ம.தி.முக மாவட்ட செயலாளர் மா.வை.மகேந்திரன் கண்டன உரையாற்றினார்.இதில் அனைத்து கழகத்தினர் பங்கேற்றனர்.



தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்–2026 ஐ முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் உள்ளடங்கிய 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் தேர்தல் நடத்தை விதிகள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன் தலைமையில் நேற்று (16.03.2026) ரிப்பன் கட்டடக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.